**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.22/2013**

2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 28 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. தர்மராஜ் (அ.சா.1) | தொழில் | : ஓட்டுனர் |
| த/பெ., க/பெ. | : சின்னத்தம்பி | வயது | : 47 |
| கிராமம் | : பெரியவண்டாளை | இனம் | : ஆண் |
| தாலுகா | : இளையான்குடி | நாள் | : 28.01.2025 |
| மாவட்டம் | : சிவகங்கை | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளார்கள்.

**<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>**

நான் சிவகங்கை மாவட்டம், பெரியவண்டாளையில் குடியிருந்து லாரி ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 27.02.2010 அன்று அதிகாலை 03.30 அளவில் கேரளாவில் இருந்து செம்பட்டிக்கு லோடு ஏற்றி வந்தபோது சத்திரப்பட்டிக்கும் முன்பாக தாய் மூகாம்பிகை கோவில் அருகில் நான் லாரியை ஓட்டி வந்தேன். என்னுடன் கிளீனர் தனபால் என்பவர் இருந்தார். அப்போது 30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் டார்ச் லைட் அடித்தார். நான் வண்டியை நிறுத்தி என்னவென்று விசாரித்தேன். அப்போது நான்கு ஆண்கள் ஓடி வந்தார்கள். என்னை பருத்திக் காட்டுக்கு உள்ளே கூட்டிச்சென்று என்னுடை கைலி வேட்டியை கிழித்து என் கை மற்றும் கால்களை கட்டிவிட்டார்கள். என்னை இரண்டுபேர் பார்த்துக்கொள்ள மற்ற மூன்றுபேர் கிளீனரை அழைத்து வரச்சென்று அவரையும் கத்தியைக் காட்டி பருத்திக்காட்டுக்குள் கூட்டி வந்தார்கள். அவரையும் கைலியால் கை மற்றும் கால்களை கட்டிவிட்டார்கள். லாரியில் என்

இருக்கைக்கு பின்னால் இருந்த ரூ.4,50,000/– பணத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அவர்கள் ஓடிவிட நானும், கிளீனரும் நாங்களாகவே எங்கள் கட்டுகளை அவிழ்த்து சத்திரப்பட்டி காவல்நிலையம் சென்று விசயத்தை சொன்னோம். அங்கு சத்திரப்பட்டி காவல்நிலைய எல்லைக்குள் சம்பவ இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆயக்குடி காவல்நிலையத்திற்கு மனு கொடுக்க வந்தோம். நான் பணம் பறிபோன பதற்றத்தில் என் மீது டீசலை ஊற்றிக்கொண்டு நெருப்பு வைத்துக்கொண்டேன். எனக்கு உடம்பில் காயம் ஏற்பட்டது. பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதியானேன். இரவு 8.00 மணிக்குமேல் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. நான் திண்டுக்கல் சிறையிலும், திருச்சி சிறையிலும் சென்று எதிரிகளை அடையாளம் காட்டினேன். சம்பவத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவரைத்தவிர மற்ற அனைவரும் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளனர். காவல்துணை கண்காணிப்பாளர் மூலமாக எதிரிகள் பிடிக்கப்பட்டு, பணம் கைப்பற்றப்பட்டது. அந்த தொகை விபரம் எனக்கு தெரியவில்லை. எங்கள் உரிமையாளர் அந்த பணத்தை பெற்றுக்கொண்டார். சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்ட 3 கத்திகள் இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுபவைதான். அவை சா.பொ.1 முதல் சா.பொ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 2 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

ஆஜர் எதிரிகளில் காக்கி உடை அணிந்திருப்பவர் பெயர் சுரேஷ். (சாட்சி 6ம் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்). மேற்படி 6ம் எதிரி சுரேஷை நான் திண்டுக்கல் சிறையில் வைத்து அடையாளம் காட்டினேன். 6ம் எதிரி இவ்வழக்கில் கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் போலீசார் சொல்லிக்கொடுத்தவாறு சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. புகாரை நான் கைப்பட எழுதினேனா என்றால் ஆம். அந்த புகாரில் தேதி மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் 3.30 மணி என்பது

இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பழனி வழியாக நிறைய முறை சரக்குகள் ஏற்றி வந்துள்ளேன் என்றால் சரிதான். தைப்பூசம் சமயத்தில் பக்தர்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயம் தைப்பூசம் என்றால் சரிதான். அச்சமயம் அதிகாலை நேரத்தில் பாதையாத்திரை பக்தர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். தாய் மூகாம்பிகை கோவில் முன்பாக சம்பவம் ஏற்பட்டதாக நான் போலீசாரிடம் சொல்லியிருக்கிறேன். சம்பவம் நடந்த இடம் ரோடா அல்லது ரோட்டின் அருகிலா என்றால் ரோட்டின் அருகில் சாலையில் இருந்து 10 மீட்டர் தூரத்தில் இருக்கும். பக்தர்கள் நடந்துவரும் இடத்திலிருந்து சற்று தள்ளி பருத்திக் காட்டில் சம்பவம் நடந்தது. நான் புகாரில் ஐந்து பேர் சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளேன். பெரியவருக்கு சுமார் 50 வயது என்று தெரிவித்துள்ளேன். அவர் இன்று நீதிமன்றத்தில் உள்ளாரா என்றால் உள்ளார். மற்றவர்களுக்கு சுமார் 30 முதல் 35 வயது இருக்கும். என்னுடைய புகாரில் மூன்று ஆண்கள், ஒரு பெண் என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. புகார் பற்றி எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் உள்ளது. நான் சத்திரப்பட்டி காவல்நிலையம் செல்லும்போது சுமார் 4.00 மணி இருக்கும். ஆயக்குடி காவல்நிலையம் வந்தபோது 5.00, 5.30 மணி இருக்கும். நான் ஆயக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபோது மணி என்னவென்றால் நான் ஆயக்குடி காவல்நிலையத்தில் தீ வைத்துக்கொண்டதால் அரசு மருத்துவமனை சென்றுவிட்டேன். அங்கிருந்து போலீசார் என்னை காலை 7.00 மணிக்குமேல் காவல்நிலையம் அழைத்து வந்தார்கள். அதன்பிறகுதான் நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள சங்கதிகளைத்தான் சாட்சியாக சொல்லியிருக்கிறேனா என்றால் ஆம். அதன்பிறகு 8 நாட்களில் எதிரிகளை கைது செய்ததாக சொன்னார்கள். சம்பவத்திற்கு பிறகு 15 நாட்கள் வரை நான் பழனியிலிலேயே தங்கியிருந்தேன். ஆயுதங்களை எங்கு வைத்து கைப்பற்றியதாகச் சொன்னார்கள் என்றால் அதைப்பற்றி என்னிடம் விபரம்

சொல்லவில்லை. புகார் கொடுத்த பிறகு எங்கள் உரிமையாளர் மறுநாள் மதியம் காவல்நிலையம் வந்தார். அப்போது உரிமையாளர் எங்களுடன்தான் இருந்தரா என்றால் இருந்தார். அப்போது காவல் ஆய்வாளர் எங்கள் உரிமையாளரையும் விசாரித்தார். தொகையை வங்கி பரிவர்த்தனை செய்யமாட்டார்களா என்றால் இல்லை. சம்பவத்திற்கு முன்பாக ஒரு வருடமாக நான் அங்கு வேலை பார்த்தேன். எங்கள் உரிமையாளருக்கு பணப்பிரச்சனை என்பதால் அவருக்குச் சார்பாக பொய்யான புகாரை கொடுத்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. நான் புகாரில் எதிரிகள் நான்குபேர் என்றும், நீதிமன்றத்தில் ஆறுபேர் என்றும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. எதிரிகள் வயது பற்றி நான் புகாரில் தெரிவித்துள்ள சங்கதிகள் பொய் என்றும், 1 மற்றும் 2 எதிரிகளுக்கு சம்பவ தேதியில் 40 வயதுக்குமேல் இருக்கும் என்று சொன்னால் அப்போது இருந்த பதற்றத்தில் நான் வயதை கவனிக்கவில்லை. எனக்கு இருந்த பதற்றத்தில் நான் எதிரிகளையே கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆயக்குடி காவல்நிலையத்தில் என்னுடைய புகாரை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல, சத்திரப்பட்டி காவல்நிலையத்தில்தான் என்னுடைய புகாரை ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்படி சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். 6 ம் எதிரியை சம்பவ இடத்திலேயே நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அவருடைய குற்றச்செயல் எதையும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. உரிமையாளரின் பணப்பிரச்சனை காரணமாக பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரில் எதிரிகளின் எண்ணிக்கை கூட்டியும், குறைத்தும் உண்மைக்குப்புறம்பாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. உரிமையாளர் பணத்தை திரும்பப் பெற்ற விபரம் எனக்கு தெரியும். எவ்வளவு தொகையை திரும்பப் பெற்றார் என்று எனக்கு தெரியாது. முழுப்பணத்தையும் திரும்பப் பெற்றாரா என்று எனக்கு தெரியாது. அவ்வாறு பணம் திருடுபோகவில்லை என்றும், காவல்நிலையத்தில் எங்கள் உரிமையாளரே பணத்தை ஒப்படைத்து

நீதிமன்றத்தில் ரூ.2,76,500/— திரும்பப் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்குக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 8 ம் வகுப்பு படித்திருக்கிறேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். சம்பவத்திற்கு ஒரு வருடம் முன்பாக இருந்து பழனி வழியாக லாரி ஓட்டி வந்தேன். இதற்கு முன்பாக இவ்வாறு சம்பவம் நடந்தது இல்லை. லைட் அடித்தவுடன் நான் இறங்கி உள்ளே சென்றுவிட்டேனா என்றால், இறங்கி நான் விசாரித்தேன். விசாரித்துக்கொண்டிருந்தபோது ஆட்களை வந்து என்னை உள்ளே அழைத்துச்சென்றுவிட்டார்கள். பருத்திக்காட்டில் இருந்து ஆட்கள் வந்தார்கள். என்னை கட்டிப்போட்ட பின்புதான் கீளிர்னரை அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு கிளீனரையும் கட்டிப்போட்டார்கள். நாங்கள் கட்டுகளை வாயால் அவிழ்த்துக்கொண்டோம். லாரியை போய் பார்த்தபோது பின்னால் இருந்த பெட்டில் பணம் இல்லை. அதில் பூட்டு உடைக்கப்பட்டு பணம் எடுக்கப்பட்டிருந்தது. லாரியில் வேறு சேதம் எதுவும் ஏற்படவில்லை. அதில் ரூ.4,50,000/— பணம் இருந்தது. அவ்வாறான தொகை இருந்ததற்கு ஆவணம் பற்றி புகாரிலோ, போலீசார் விசாரணையில் எதுவும் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. நான் 26.02.2010 என்று புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 27.02.2010 என குறிப்பிட்டுள்ளேன். புகாரில் 26.02.2010 என்று இருந்ததை 27.02.2010 என நான் திருத்தினேனா என்றால் இல்லை. நான் பணம் பறிபோன மனஉளைச்சலில் தீ வைத்துக்கொண்டேன். எங்கள் இருவரையும் காட்டிற்குள் கட்டி வைத்துவிட்டதால் பணத்தை யார் திருடினார்கள் என நான் பார்க்கவில்லை என்றால் எங்களை கட்டிப்போட்டுவிட்டு, லாரிக்கு வந்து அவர்கள் பணம் எடுத்ததை நாங்கள் பார்த்தோம். போலீசார் நானும் கிளீனரும் பணத்தை எடுத்திருப்போமா என எங்கள் இருவரையும் தனியாக விசாரித்தார்கள்.

**உண்மையில் நான் சொல்வதுபோல் சம்பவம் நடந்திருந்தால் தைப்பூசத்திற்கு வந்திருந்த கூட்டத்தினரே எதிரிகளை பிடித்திருப்பார்கள் என்றும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தீ வைத்து காயம் அடைந்ததால் நான் புகார் எதுவும் எழுதவில்லை என்றும், போலீசாரே புகாரை எழுதி என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.**

**(4—ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தக்கவைத்துக்கொள்கிறார்)**

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.01.28 19:07:02 +0530